



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வடகிழக்கு பருவமழையின் போது தனியார் மருத்துவமனைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பாக, நிர்வாக பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.10.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 749/2016 நாள்: 22.10.2016

## பத்திரிக்கை செய்தி

### தனியார் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பேரிடர் மேலாண்மை தொடர்பான அடிப்படை வசதிகள் மற்றும் தீ தடுப்பு உபகரணங்கள் பயன்பாட்டில் அவசியம் வைத்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தல்.

வடகிழக்கு பருவமழையின் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தனியார் மருத்துவமனைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூட்டம் 22.10.2016 இன்று நடத்தப்பட்டது. கூட்டத்தில் பின்வரும் விபரங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழையின் போது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமாயின், பொதுமக்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிட்சை அளிக்க வேண்டும். சிகிச்சை வழங்க போதுமான படுக்கை வசதி மற்றும் மருந்துக்கள் இருப்பு வைக்க வேண்டும். அவசர தேவையின் போது மருத்துவமனைகளில் கூடுதலாக மருத்துவ உதவி வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பாடுமாயின் அதற்கான போதிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

தாழ்வான பகுதியில் அமைந்துள்ள மருத்துவ மனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் வெள்ள சேதத்திலிருந்து, சிகிச்சை பெறும் நோயாளிகள், பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் இதர நபர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு தேவையான முன்னேற்பாடுகளை நிறுவன பொறுப்பாளர்கள் இப்பொழுதே ஏற்பாடு செய்து வைத்திருக்க வேண்டும்.

தீ தடுப்பு நடவடிக்கைகள் கட்டிடங்களில் அவசியம் மேற்கொண்டிருக்க வேண்டும். தீ அணைப்பு உபகரணங்கள் பயன்படுத்துவது தொடர்பாக சம்மந்தப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்த வேண்டும்.

15 வருடங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்களில் மின் வயறுகளால் விபத்து ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், மின் ஒயர்கள் ஏதேனும் இடத்தில் பழுதடைந்துள்ளதா என்பதனை ஆய்வு செய்ய வேண்டும். பழுதடைந்த ஒயர்களை மாற்றி விபத்து ஏற்படுவதனை தடுக்க வேண்டும்.

விபத்து அல்லது ஆபத்து நேரத்தில், தனியார் மருத்துவமனைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில்  கட்டிடத்தின் உள்ளே இருக்கும் நபர்களை பாதுகாப்பாக வெளியேறுவதற்கு தக்க முன்னேற்பாடுகள் செய்து வைத்திருக்க வேண்டும்.

விபத்து காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒவ்வொரு நிறுவனமும் திட்ட அறிக்கை தயார் செய்து வைத்திருக்க வேண்டியதுடன் பணியாளர்களுக்கும் விபரங்களை தெரிவிக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர், முதன்மை கல்வி அலுவலர், வட்டாட்சியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.